செய்தி வெளியீடு எண்: 250 நாள்: <u>21.3.2010</u>

<u>செய்தி வெளியீடு</u>

# 3 கோடியே 84 இலட்ச ரூபாய்ச் செலவில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவியர்க்கும் இலவசப் பேருந்துப் பயணச் சலுகை !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்க்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கும் திட்டம் 1990ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசினால் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், அத்திட்டம் படிப்படியாக மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்க்கும் விரிவுபடுத்தப்பட்டது. பள்ளி மாணவ மாணவியர்க்கு வழங்கப்பட்டது போல, 2007ஆம் ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவ மாணவியர்க்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழக சட்டப்பேரவையில் 9.7.2009 அன்று நடைபெற்ற தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக்கோரிக்கை விவாதத்தின் முடிவில் அரசு வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்க்கு வழங்கப்பட்டுள்ளது போல, தமிழகத்தில் செயல்பட்டுவரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில் பயிற்சி நிலையங்களில் (ஐ.டி.ஐ) பயிலும் மாணவ மாணவியர்க்கும் இலவசப் பேருந்துப் பயணச் சலுகையை வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் பயனாக, ஏறத்தாழ 21 ஆயிரத்து 500 மாணவ மாணவியர் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 கோடியே 84 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.